Balar Malar Tamil Educational Association Inc.
பாலர் மலர் தமிழ் கல்விக்கழகம்
PO Box 8121, Blacktown NSW 2148, Australia
IBN: 125 Estd. 1977 ABN: 58 344 591 290
Phone#: 02 72BM 2345 / 02 7226 2345

# பாலர் மலர் தமிழ் போட்டிகள் – 2026

📅 தேதி: மே **30, 2026**
📍 இடம்: **Holsworthy Public School**
முகவரி: **36 Infantry Parade, Holsworthy NSW 2173**

🔔 முக்கிய தேதிகள்:

- போட்டி நடைபெறும் நாள்: **30.05.2026 (சனிக்கிழமை)**
- பதிவு செய்ய இறுதி நாள் : **15.05.2026 (வெள்ளிக்கிழமை), இரவு 11:59PM**

## உள்ளடக்கம்

★ முன்னுரை
★ போட்டி விதிமுறைகள் மற்றும் விளக்கங்கள்
★ போட்டிக்கான விடயங்கள்
★ பரிசு விபரங்கள்

## ★ முன்னுரை

நாற்பத்தி ஒன்பது (49) ஆண்டுகளுக்கு முன், நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில், தமிழ் மொழியும் கலாச்சாரமும் நிலைத்திருக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம் நிறுவப்பட்டது. இந்நாள் வரை ஆஷ்பீல்ட், ஹோல்ஸ்வர்தி, ஹார்ன்ஸ்பி (செர்ரிபுரூக்), மிண்டோ, நியூகாசில், மார்ஸ்டன் பார்க், குவேக்கர்ஸ்ஹில், உளங்காங்கு, செவன் ஹில்ஸ் (பிளாக்டவுன்), பராமட்டா மற்றும் ஒரிம்பா கிளைகளில் இயங்கி வரும் தமிழ்ப் பள்ளிகள் மூலம், இளைய தலைமுறையினருக்குத் தமிழ் மொழியும் தமிழரின் பண்பாடும் மரபும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.
பதிமூன்று (13) ஆண்டுகளுக்கு முன், செவன் ஹில்ஸ் தமிழ்ப் பள்ளியில் தொடங்கப்பட்ட "தமிழ்ப் போட்டிகள்," தற்போது BMTC – Balar Malar Tamil Competitions என்கிற பெயரில், ஆண்டுதோறும் அனைத்து பாலர் மலர் பள்ளிகளின் மாணவர்களுக்கும் திறமைகளை வெளிப்படுத்தும் ஒரு மாநிலளாவிய மேடையாகத் திகழ்கின்றது.
BMTC–2026 இந்த ஆண்டும் மிகுந்த உற்சாகத்துடன் நடைபெறவிருக்கிறது! மாணவர்களின் தமிழ் மொழித் திறன்கள் மற்றும் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் ஒரு முக்கியமான மேடையாக இந்த போட்டிகள் அமைந்துள்ளன.
BMTC-2026 போட்டிகளை ஒழுங்கமைக்கும் பொறுப்பை ஏற்கும் பெருமையை ஹோல்ஸ்வொர்த்தி பள்ளி இந்த முறை பெறுகிறது. இப்போட்டிகளில் பங்கேற்று, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற அனைவரையும் வாழ்த்துகிறோம்.

## ★ போட்டி விதிமுறைகள் மற்றும் விளக்கங்கள்:

1. தமிழ்ப்போட்டிகள், பாலர்மலர் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்காக மட்டுமே நடைபெறும்.
2. போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள், கீழே இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை நிரப்ப வேண்டும்.
3. போட்டி விபரமும் வயதுப்பிரிவுகளும் கீழே தரப்பட்டுள்ளன (பங்கேற்பாளர் வயது 30/04/2026 அன்று உள்ளபடி கணிக்கப்படும்.)
4. கீழ்க்காணும் போட்டிகளில் எதிர்பார்க்கும் திறமை மற்றும் மதிப்பீடு செய்யும் முறை பற்றிய விளக்கங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.
5. மாணவர்கள் குழுப் போட்டிகள் (வினாடி வினா மற்றும் நாடகம்) எதற்கேனும் பதிவு செய்ய வேண்டுமெனில் , அவரவர்களின் பள்ளி தலைமை ஆசிரியரை தொடர்பு கொள்ளவும்.

| ID | போட்டி | வயது | தேதி முதல் | தேதி வரை |
|---|---|---|---|---|
| **1** | குழந்தைப் பாட்டுப்போட்டி | **4** முதல் **5** வயது | **01/05/2020** | **30/04/2022** |
| இப்போட்டிக்கு இரண்டு பாடல்கள் கொடுக்கப்படும். ஏதேனும் ஒரு பாடலை மனனம் செய்து கூறவேண்டும். பொருளைக் கூற வேண்டியதில்லை. | | | | |
| **2** | பழமொழி-பொன் மொழிகள் | **6** முதல் **7** வயது | **01/05/2018** | **30/04/2020** |
| இப்போட்டிக்கு இரு தலைப்புகளில் ஐந்து பழமொழி/பொன்மொழிகள் கொடுக்கப்படும். ஏதேனும் ஒரு தலைப்பில் பழமொழி/பொன்மொழிகளை மனனம் செய்து கூறவேண்டும். பொருளையும் கூற வேண்டும். | | | | |
| **3** | திருக்குறள்-செய்யுள் மனனப்போட்டி | **8** முதல் **9** வயது | **01/05/2016** | **30/04/2018** |
| இப்போட்டிக்கு ஐந்து திருக்குறள்கள் பொருளுடன் கொடுக்கப்படும். அந்த ஐந்து திருக்குறள்களையும், அவற்றின் பொருளையும் மாற்றமின்றி, பிழையின்றி, தெளிவாக கூறவேண்டும். | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | கதை சொல்லும் போட்டி | **10 முதல் 11 வயது** | **01/05/2014** | **30/04/2016** |
| இப்போட்டிக்கு கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பை தேர்ந்தெடுத்து, தங்களது திறமையை முன்னிறுத்தி, தாமாகத் தடையின்றி, ஆங்கிலம் கலக்காமல் கதை சொல்லவேண்டும். ஒவ்வொரு போட்டியாளருக்கும் மூன்று நிமிடங்கள் வழங்கப்படும். | | | | |
| 5 | பேச்சுப் போட்டி | **12 முதல் 13 வயது** | **01/05/2012** | **30/04/2014** |
| இப்போட்டிக்காக, தரப்பட்டுள்ள தலைப்பில் மாணவர்களே தங்கள் கருத்துக்களை தயார் செய்து பேசச்சுப் போட்டியில் தங்கள் பேச்சுத் திறமையை வெளிப்படுத்தவேண்டும். அதை மூன்று நிமிடங்கள் பேச வேண்டும். | | | | |
| 6 | விவாதம் **(Persuasive speech )** | **14 வயதுக்கு மேற்பட்டோர்** | | **30/04/2012** |
| இப்போட்டிக்கு கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பை தேர்ந்தெடுத்து, “ஆம்” அல்லது “இல்லை” என ஒரு பக்கத்தை தேர்ந்தெடுத்து மூன்று நிமிடங்கள் விவாதிக்க வேண்டும். 16 வயதுக்கு மேற்பட்டோர் - ஒவ்வொரு போட்டியாளருக்கும் ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும். | | | | |
| 7 | ஓரங்க நாடகம்- உரையாடல் **(Mono acting)** | **14 வயதுக்கு மேற்பட்டோர்** | | **30/04/2012** |
| இப்போட்டிக்கு கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒரு நிகழ்வை அல்லது உரையாடலை சில காட்சிகளின் மூலம் முழுமையாகக் காட்டும் நாடகம் ஓரங்க நாடகம் ஆகும். ஒவ்வொரு போட்டியாளருக்கும் மூன்று நிமிடங்கள் வழங்கப்படும். | | | | |
| 8 | அடிப்படை எழுத்து அறிவு போட்டி. | **10 முதல் 11 வயது** | **01/05/2014** | **30/04/2016** |
| கொடுக்கப்படும் படம் மற்றும் குறிப்பைப் பயன்படுத்தி, ஒரு சிறிய கதை எழுத வேண்டும். எழுத்து அறிவு போட்டிகான படங்கள் போட்டி நடைபெறும் நாளன்று வழங்கப்படும். | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **9** | கதை எழுதும் போட்டி | **12** முதல் **13** வயது | **01/05/2012** | **30/04/2014** |
| கொடுக்கப்படும் படங்களை கொண்டு கதை எழுத வேண்டும். கதை எழுதும் போட்டிகான படங்கள் போட்டி நடைபெறும் நாளன்று வழங்கப்படும். | | | | |
| **10** | கட்டுரைப் போட்டி | **14** வயதுக்கு மேற்பட்டோர் | | **30/04/2012** |
| இப்போட்டிக்கு கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பை தேர்ந்தெடுத்து, **100** வார்த்தைகள் கடந்துவிடாமல் கட்டுரை எழுத வேண்டும். போட்டி நடைபெறும் நாளன்று எழுதும் தலைப்பு வழங்கப்படும். | | | | |
| **11** | குழுப்போட்டி வினாடி வினா **(5 students)** | **10** வயதுக்கு மேற்பட்டோர் | | **30/04/2016** |
| தலைப்புகள்:<br>• இலக்கணம்<br>• இலக்கியம்<br>• உணவே மருந்து<br>• தமிழர் வரலாறு<br>• தமிழ் சார்ந்த அறிவியல்<br>• அவுஸ்திரேலியாவில் தமிழ்<br>• கலாச்சாரம், பண்பாடு, மரபு<br>• மொழி ஆளுமை<br><br>இப்பகுதியில், குழுவாக **5** மாணவர்கள் பங்கேற்க வேண்டும். மேலே கூறிய தலைப்புகளில் இருந்து கேள்விகள் கேட்கப்படும். ஒவ்வொரு மாணவரும் தலைப்புகளில் தேர்ச்சி பெற்றிருப்பது சிறந்தது. | | | | |
| **12** | குழுப்போட்டி குறுநாடகம் **(3 to 8** மாணவர்கள்) | **10** வயதுக்கு மேற்பட்டோர் | | **30/04/2016** |
| நடுவு நிலைமை அல்லது முயற்சி திருவினையாக்கும் என்ற தலைப்பில் ஒரு தமிழ் மொழி சார்ந்த நாடகம் **(3-8** மாணவர்கள், **10** நிமிடங்கள் வழங்கப்படும்) | | | | |

**PO Box 8121, Blacktown NSW 2148, Australia**

**IBN: 125** **Estd. 1977** **ABN: 58 344 591 290**

**Phone#: 02 72BM 2345 / 02 7226 2345**


மதிப்பீடு செய்யும் முறை:
போட்டியின் போது தலைப்புக்கு ஏற்ப கருத்து, கருத்தின் ஆழம், இலக்கண மரபு, உச்சரிப்பு, பொருள் உணர்ந்து கூறுதல், சபை மரபு, நடிப்பு, மனனம் மற்றும் பேசும் திறமை போன்றவை கவனிக்கப்படும். போட்டியில் நடுவர்களின் முடிவுகள் இறுதியானவை.

★ போட்டிக்கான விடயங்கள்

## குழந்தைப் பாட்டுப் போட்டி (4 முதல் 5 வயது)

ஓடி விளையாடு பாப்பா

ஓடி விளையாடு பாப்பா
நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா
ஒரு குழந்தையை வையாதே பாப்பா

சின்னஞ்சிறு குருவி போலே
நீ திரிந்து பறந்துவா பாப்பா
வண்ணப் பறவைகளைக் கண்டு
நீ மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா

பொய் சொல்லக் கூடாது பாப்பா
என்றும் புறஞ்சொல்ல லாகாது பாப்பா
நீதி உயர்ந்த மதி கல்வி
அன்பு நிறைந்தவர்களே மேலோர் பாப்பா

– சுப்பிரமணிய பாரதி

(அல்லது)

Balar Malar Tamil Educational Association Inc.
பாலர் மலர் தமிழ் கல்விக்கழகம்
PO Box 8121, Blacktown NSW 2148, Australia
IBN: 125 Estd. 1977 ABN: 58 344 591 290
Phone#: 02 72BM 2345 / 02 7226 2345

# என்ன வண்ணம் வேண்டும்?

வெள்ளை வண்ணம் வேணுமா? – அம்மா!
வெண்ணெய் கொஞ்சம் அள்ளிக்கோ!

பச்சை வண்ணம் வேணுமா? – அம்மா!
கிளியைக் கண்டு பேசிக்கோ!

நீல வண்ணம் வேணுமா? – அம்மா!
நீயே கடலைப் பார்த்துக்கோ!

சிவப்பு வண்ணம் வேணுமா? – அம்மா!
செந்தாமரையைக் கேட்டுப்பார்!

மஞ்சள் வண்ணம் வேணுமா? – அம்மா!
வான நிலாவைத் தொட்டுக்கோ!

எல்லா வண்ணமும் வேணுமா? – அம்மா!
என்னை இடுப்பில் எடுத்துக்கோ!

- ஈரோடு தமிழன்பன்

Balar Malar Tamil Educational Association Inc.
பாலர் மலர் தமிழ் கல்விக்கழகம்
PO Box 8121, Blacktown NSW 2148, Australia
IBN: 125 Estd. 1977 ABN: 58 344 591 290
Phone#: 02 72BM 2345 / 02 7226 2345

## பழமொழி/பொன்மொழிகள் போட்டி (6 முதல் 7 வயது)

தலைப்பு: உழைப்பு **(Hard Work)**

1. உழைத்தான் உண்ணுவான்.
பொருள்: உழைக்கும் மனிதருக்கே உணவும் வெற்றியும் கிடைக்கும்.

2. உழைப்பே உயர்வு தரும்.
பொருள்: கடின உழைப்பின் மூலம் தான் மனிதன் உயர முடியும்.

3. வினை விதைத்தவன் வினை அறுப்பான்.
பொருள்: நாம் செய்யும் செயல்களுக்கு ஏற்பதான் பலன் கிடைக்கும்.

4. முழு முயற்சி பாதி வெற்றிக்கு சமம்.
பொருள்: நாம் நம்மால் முடிந்தவரை முயற்சித்தால், அது பாதி வெற்றியை அடைவதற்குச் சமம்.

5. முயற்சி திருவினை ஆக்கும்.
பொருள்: தொடர்ந்து முயற்சித்தால், மகத்தான சாதனைகளை அடையலாம்.

**(அல்லது)**

**தலைப்பு: பொறுமை (Patience)**

1. பொறுமை கடலினும் பெரிது.
பொருள்: பொறுமை மிகவும் பெரிய பண்பு.

2. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு.
பொருள்: கோபமாக இருப்பவருக்கு சரியான சிந்தனை இருக்காது.

3. மெதுவாக சென்றால் நெடுதூரம் செல்வாய்.
பொருள்: நிதானமாக மேற்கொள்ளும் செயல்கள், நிலையான வெற்றியை அளிக்கும்.

4. காத்திருந்தால் கனி கிடைக்கும்.
பொருள்: பொறுமையுடன் இருந்தால் நல்ல முடிவு கிடைக்கும்.

5. பொறுமை கசக்கும், அதன் பலனோ இனிக்கும்.
பொருள்: பொறுமையுடன் இருப்பது அந்த நேரத்தில் கடினமாகத் தோன்றினாலும், அதன் பலன் இனிமையானதாகவே இருக்கும்.

Balar Malar Tamil Educational Association Inc.
பாலர் மலர் தமிழ் கல்விக்கழகம்
PO Box 8121, Blacktown NSW 2148, Australia
IBN: 125 Estd. 1977 ABN: 58 344 591 290
Phone#: 02 72BM 2345 / 02 7226 2345

## திருக்குறள் / செய்யுள் மனனப் போட்டி (8 முதல் 9 வயது)

அன்புடைமை

1. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்
பொருள்: அன்பைத் தாழ்ப்பாள் போட்டுத் தடுக்க முடியுமா? அன்பு மிகுதி அடைந்தால், கண்ணில் ஈரம் பெருகி வெளிப்படும்.

2. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு
பொருள்: அன்பு இல்லாதவர், எல்லாவற்றையும் தனக்கு உரியது என்பர்; அன்பு உள்ளவர்களோ, எனது உயிரும் பிறருக்கே என்பர்

3. அன்போடு இயைந்த வழக்கென்ப; ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு
பொருள்: அன்புடன் இணைந்த செயல் என்பது, சிறந்த உயிர்களின் உடம்புடன் உயிர் கொள்ளும் தொடர்பு போன்றது.

4. அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு
பொருள்: அன்பின் பாதையே உயிரின் தன்மை. அன்பு இல்லாதவர்களுக்கு எலும்பு மேல் போர்த்திய தோல் போன்றதே உடம்பு.

5. அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு
பொருள்: அன்பு தருகின்ற ஆர்வம் உண்டானால், அது தரும் நல்ல பண்புகள் நாட முடியாத அளவு சிறப்புகளாக இருக்கும்.

(அல்லது)

## அடக்கமுடைமை

1. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்
பொருள்: அடக்கம் அழியாத புகழைக் கொடுக்கும். அடங்காமை வாழ்வையே இருளாக்கி விடும்.

2. காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு
பொருள்: பொருளாக இல்லாத அடக்கத்தைப் பாதுகாக்க வேண்டும். அதன் பயனைவிடச் சிறந்தது வேறில்லை உயிருக்கு.

3. ஒருமையுள் ஆமைப்போல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து
பொருள்: ஒன்றில் மட்டும் ஆமை போல் ஐந்து புலன்களையும் அடக்கச் செய்தால், எழுந்து செயல்படும் போதெல்லாம் காவலாக இருக்கும்.

4. யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு
பொருள்: எதைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்க வேண்டும். இல்லையென்றால் சொல் குற்றம் ஏற்பட்டு, சோகத்தைக் காக்க நேரிடும்.

5. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு
பொருள்: தீ பட்ட காயம் ஆறிப்போகும். நாவினால் திட்டிய காயம் வடுவாக மாறும்.

## பேச்சுப் போட்டி (12 முதல் 13 வயது)

### ஒழுக்கம்

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பான வணக்கம்.

இன்று நான் பேசப்போகும் தலைப்பு ஒழுக்கத்தை பற்றியது.

<< மாணவர்கள் பேச்சு போட்டிக்காக தாங்களே எழுதிய வசனங்கள் >>

நன்றி வணக்கம்

(அல்லது)

### அறம் செய்ய விரும்பு

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பான வணக்கம்.

இன்று நான் பேசப்போகும் தலைப்பு அறத்தை பற்றியது.

<< மாணவர்கள் பேச்சு போட்டிக்காக தாங்களே எழுதிய வசனங்கள் >>

நன்றி, வணக்கம்.

## கதை சொல்லும் போட்டி (10 முதல் 11 வயது)

ஒழுக்கம் உயர்வு தரும்

(அல்லது)

தீதும் நன்றும் பிறர் தர வாரா

## விவாதம் (Persuasive speech) (14 வயதுக்கு மேற்பட்டோர்)

வெகுளாமை மனிதனை பலவீனமாக்குகிறதா அல்லது பலமாக்குகிறதா?

(அல்லது)

மன்னிப்பு ஓர் உன்னதமான நற்பண்பா அல்லது அது தவறுகளை ஊக்குவிக்கிறதா?

## ஓரங்க நாடகம்/ உரையாடல் (14 வயதுக்கு மேற்பட்டோர்)

கொடுக்கப்பட்டுள்ளத் திருக்குறள் பொருளுக்கு நான்கு முதல் ஐந்துநிமிடம் வரை ஓரங்க நாடகம் *(Monoact)* ஒன்றை அமைக்கவும்

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே யொழிய விடல்.

பொருள்
நடுவுநிலை தவறுவதால் ஏற்படக்கூடிய பயன் நன்மையையே தரக் கூடியதாக இருந்தாலும், அந்தப் பயனைக் கைவிட்டு நடுவுநிலையைத்தான் கடைப்பிடிக்க வேண்டும், என்பதை உணர்த்தும் திருக்குறளில், ஒரு நடுவு நிலைமை இல்லாமல் தவறு செய்யும் நண்பனுக்கு நடுவு நிலைமையை எடுத்து கூறும் விதத்தை பிரதிபலிக்கும் ஓரங்க நாடகம் (Monoact) ஒன்றை அமைக்கவும்.

அல்லது

கொடுக்கப்பட்டுள்ளத் திருக்குறள் பொருளுக்கு நான்கு முதல் ஐந்துநிமிடம் வரை உரையாடலை நிகழ்த்தவும்

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

---

பொருள்: ஊழியின் காரணத்தால் ஒரு செயல் செய்ய முடியாமல் போகுமாயினும், முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது கொடுக்கும்.

விதிமுறைகள் :

1. இப்போட்டிக்கு கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை அல்லது உரையாடலை சில களங்களில் முழுமையாக பிணைத்துக் காட்டும் நாடகம், ஓரங்க நாடகம் ஆகும்.
2. ஒவ்வொரு போட்டியாளருக்கும் நான்கு முதல் ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
3. போட்டியாளர்கள் **(Only hints)** சிறு குறிப்புக்கள் அடங்கிய அட்டையை வைத்துக்கொள்ளலாம்.

குழுப் போட்டிகள்

**1.** வினாடி வினா **(5** மாணவர்கள்**)**

வினாடி வினா போட்டி விதிமுறைகளும்/விளக்கங்களும்

1. போட்டியில் பங்கு பெறுபவர் 10 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.
   - வினாடி வினா – (10 -13 years )
   - வினாடி வினா – (14 years and above)
   - வினாடி வினா – Bridging/Smart class students
2. ஒரு குழுவில் 3- 5 மாணவர்கள் வரை இருக்கலாம்.
3. கேள்விகள் கீழ்வரும் தலைப்புகளில் இருந்தே கேட்கப்படும்.
   - இலக்கணம்
   - இலக்கியம்
   - உணவே மருந்து
   - தமிழர் வரலாறு
   - தமிழ் சார்ந்த அறிவியல்
   - அவுஸ்திரேலியாவில் தமிழ்
   - கலாச்சாரம், பண்பாடு, மரபு
   - மொழி ஆளுமை

4. முதல் சுற்றில் மாணவர்கள் குழுவாக விடைகளை வினாத்தாளில் பதிலாக எழுதுவார்கள், அதிலிருந்து மாணவர்கள் இரண்டாம் சுற்று போட்டிக்கு தேர்வு செய்ய படுவார்கள்
5. இரண்டாம் சுற்றிலிருந்து ஒவ்வொரு குழுவும் தங்கள் கேள்விக்கான பதிலை 30 வினாடிகளுக்குள் தர வேண்டும். அக்குழு தேர்ந்தெடுத்த முதல் போட்டியாளர் மற்றவர்களுடன் கலந்து ஆலோசிக்காமல் சரியான பதிலளித்தால் 10 புள்ளிகளும், கலந்தாலோசித்து சரியான பதிலளித்தால் 5 புள்ளிகளும் வழங்கப்படும். தவறாக பதிலளிக்கும் பட்சத்தில் அந்தக் கேள்வி அடுத்த குழுவிடம் கேட்கப்படும். அடுத்த குழு சரியான பதிலளித்தால் 3 மதிப்பெண்கள் வழங்கப்படும்.
6. போட்டிகள் இரண்டு குழுக்களிடையே நடைபெறும். வினாக்கள் இரு குழுக்களுக்கிடையே மாறி மாறி கேட்கப்படும். கேள்விக்கான பதில்களை சத்தமாகவும் தெளிவாகவும் கொடுத்தல் அவசியம்.
7. முதல் சுற்றில் எல்லா தலைப்புகளிருந்தும் அடிப்படை கேள்விகள் இருக்கும்.
8. அடுத்து வரும் ஒவ்வொரு சுற்றுக்கும் ஒரு தலைப்பு – பாலர் மலர் சுழற்சக்கரத்தை சுற்றி தேர்ந்தெடுக்கப்படும். தேர்ந்தெடுத்த தலைப்பிலிருந்து 5 கேள்விகள் கேட்கப்படும். பத்து கேள்விகளின் முடிவில் எந்தக் குழு அதிகமான மதிப்பெண்கள் பெறுகிறதோ அந்தக் குழு அடுத்த சுற்றிற்கு முன்னேறும்.
9. தவறான பதிலுக்கு மதிப்பெண்கள் குறைக்கப்படமாட்டாது
10. கடைசிச் சுற்றில் அதிக மதிப்பெண்கள் பெறும் குழு முதல் பரிசையும், அடுத்த குழு இரண்டாவது பரிசையும் பெறும்.

குறிப்பு: மேற்படி விவரங்கள் போட்டியன்று விளக்கப்படும்

### 2. குறுநாடகம்

நடுவு நிலைமை அல்லது முயற்சி திருவினையாக்கும் என்ற தலைப்பில் ஒரு தமிழ் மொழி சார்ந்த நாடகம் (3-8 மாணவர்கள், 10 நிமிடங்கள் வழங்கப்படும்)

★ பரிசு விவரங்கள்:

ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் போட்டிக்கான பரிசுகள் பின்வருமாறு வழங்கப்படும்:

 பாலர் மலர் கல்விக்கழக அளவில்:

- முதல் பரிசு
- இரண்டாம் பரிசு
- மூன்றாம் பரிசு

 பாலர் மலர் பள்ளி அளவில்:

- சிறப்புப் பரிசு

போட்டியில் பங்கேற்பவர்களுக்கு அனைவருக்கும் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும்.